# 500 கோடி ரூபா சூழல் பாதுகாப்புத் திட்டம்: வடபகுதி நிதிக்கு நேர்ந்த கதி என்ன?

## ▪ பதில் சொல்லுகிறார் தேவநேசன் நேசையா

உலகவங்கியின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சூழல் பாதுகாப்புத் திட்டத்தில், வடபகுதி திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வடபகுதியில் அமுல்படுத்தப்படாமைக்கு அரசியல் ரீதியான காரணங்களே தடையாக உள்ளதாக சூழல்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறினார்.

சுற்றுப்புறச் சூழலில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் பாதகமான விளைவுகளைத் தடுப்பதற்கும், சுற்றுப்புறச் சூழலில் பௌதீக, இரசாயன உயிரியல் சமநிலையை ஏற்படுத்துவதற்கும், இச்சமநிலையைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்கும் இதன் மூலம் சூழலைப் பாதுகாப்பதற்கும் ஒரு நீண்டகாலத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. உலக வங்கியின் உதவியின் கீழ் பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு அமைச்சு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

சமார் 500 கோடி ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம், இரண்டு ஆண்டுகளில் குறித்த இலக்கை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் சுமார் ஐம்பது வீதமான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டன.

மேற்படி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பெரியளவிலான சூழல் பாதுகாப்புத் திட்டங்களில் இதுவும் ஒன்று. இத்திட்டம் இலங்கை முழுவதற்கும் அமுல்படுத்தப்படுவதற்காகவே ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டது. அதற்கான நிதியும் பெறப்பட்டது. ஆனால், இது நடைமுறைப்படுத்தப்படுவதற்கான உத்தரவு கிடைத்ததும், வடபகுதிக்கான நடவடிக்கைகள் அனைத்தும் அத்திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டுவிட்டது. தற்போது மேற்படி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியுதவி முழுவதும் ஏனைய பகுதிகளில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைக்காகச் செலவிடப்பட்டு வருகின்றது.
இந்த நிதியின் கணிசமான பகுதி "வில்பத்து", "யால" ஆகிய பகுதிகளில் வனப்பாதுகாப்பு, மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு ஆகிய செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் ஏனைய பகுதிகளிலும் இதேபோன்ற நடவடிக்கைகள் மிகவும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆங்காங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

உலகவங்கியின் மேற்படி உதவித் திட்டத்தின் கீழ், வடபகுதியிலும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமைக்கு அரசியல் ரீதியான காரணிகளே பெரிதும் தடையாக உள்ளதாக பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. தேவநேசன் நேசையா கூறுகிறார்.

எரிபொருள் மற்றும் மின்சார வசதியின்மையால் வடபகுதியின் விறகுத் தேவைக்காகப் பெருமளவு மரங்கள் அன்றாடம் வெட்டி அழிக்கப்பட்டு வருகிறது என்றும், இந்த நிலைமை தொடர்ந்தும் நீடித்தால் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது வடபகுதியில் மரங்கள் விறகுக்காக வெட்டப்படுவது அதிகமாக உள்ளது என்றும், இந்த நிலையில் சாத்தியமான சூழல் பாதுகாப்பு என்பது புதிதாக மரங்களை நாட்டுவது என்பதை விட, மரங்கள் வெட்டி அழிக்கப்படுவதை முடிந்தவரை தடுத்து நிறுத்துவதாகத்தான் இருக்கும் என்றும் இதை வடபகுதியில் மேற்கொள்ள மேற்படி திட்டத்தில் வகை செய்திருக்கலாமே என்று திரு. தேவநேசன் நேசையாவிடம் கேட்டபோது; விறகுக்காக மரங்கள் வெட்டப்படுவதைத் தவிர்ப்பதாக இருந்தால் விறகுக்குப் பதிலாக மாற்று எரிபொருள் வழங்கப்பட வேண்டும். இதற்குத் தேவையான எரிபொருட்களை வடபகுதிக்கு அனுப்பி வைக்க வேண்டும் அல்லது மின்விநியோகத்தை மீண்டும் வடபகுதிக்கு ஏற்படுத்த வேண்டும். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் இவை போன்ற நடவடிக்கைகளை மேற்படி உலக வங்கியின் திட்டத்தின் கீழ் மேற்கொள்வது என்பது சாத்தியமில்லை என்றும் இதற்கு தற்போதைய அரசியல், இராணுவ காரணிகள் முழுமையான முட்டுக் கட்டையாக உள்ளன என்றும் பதிலளித்தார்.

இந்தவகையில் நோக்கினால், உலக வங்கியின் சூழல் பாதுகாப்புத் திட்டம் வடபகுதிக்கு உசிதமற்றதாகத் தோற்றமளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் வடபகுதிக்குச் சாத்தியமானதும் இராணுவ அரசியல் ரீதியான அனைத்து முட்டுக்கட்டைகளையும் ஊடறுத்துச் சென்று நடைமுறைப்படுத்தக் கூடிய உசிதமான திட்டம் ஒன்று வடபகுதியில் இருந்து தான் தமது அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் திரு. தேவநேசன் நேசையா தெரிவித்தார்.

காலங்கடந்த பின்பு வெளிவரும் இந்த அறிவிப்புக்கு ஏற்ப, வடபகுதியில் இருந்து சாத்தியமான சூழல் பாதுகாப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டால், அது மேற்படி அமைச்சுக்குச் சென்றடைந்து நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி கிடைக்கும் போது, சூழல் பாதுகாப்புக்கான உலக வங்கித் திட்டத்தின் கால எல்லை கடந்துவிட்டதாகக் கூறும், உலக வங்கி அதிகாரி ஒருவரின் ஒப்பமிடப்பட்ட கடிதம் ஒன்று சூழல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அலுவலக மேசைக்கு வந்துசேரும் என்பதை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம். ■

# தமிழ்மக்களின்...

வருகிறது. ஆனால் மனித உரிமைகள் பணிக்குழுவின் கள உத்தியோகத்தர்கள் வளங்கள் பற்றாக்குறையாக உள்ளமையாலும், பாதுகாப்புப் படைகளினுடனான தொடர்புகளைக் கையாள்வதில் நிலவும் சிரமங்கள் காரணமாகவும் தமது நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர்.

### எம்பிலிப்பிட்டிய படுகொலைகள்

எம்பிலிப்பிட்டியாவில் 32 மாணவர்கள் காணாமற் போனமை தொடர்பாக, பத்து இராணுவத்தினரை 'மனித உரிமைகள் பணிக்குழு' அடையாளம் காட்டியுள்ளது. ஆனால் அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### மட்டக்களப்பில் காணாமல் போன அகதிகள்

மட்டக்களப்பு பல்கலைக்கழக அகதிகள் முகாமில் இருந்து 58 தமிழ் அகதிகள் காணாமல் போனது தொடர்பாக, நான்கு இராணுவத்தினரை மனித உரிமைகள் பணிக்குழு அடையாளம் காட்டியது. ஆனால் இவர்களுக்கு எதிராக வழமைபோல அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### ஜனாதிபதி ஆணைக்குழு போதுமானதல்ல

1991 ஜனவரிக்குப் பின்னர் காணாமல் போனோர், கடத்தப்பட்டோர் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு பரிசீலனைக்கு எடுத்த 873 விடயங்களில் 38 விவகாரங்களை மட்டுமே பூர்த்தி செய்தது. இவற்றில் இரண்டு மட்டுமே சட்டமா அதிபரிடம் மேல் விசாரணைக்காக பாரப்படுத்தப்பட்டது. ஆயினும் இதுதொடர்பாக எதுவித விசாரணையும் நடைபெறவில்லை. எனவே இவ் ஜனாதிபதி ஆணைக்குழு அதன் பணிக்கு போதுமானதாக இல்லை.

### கற்பழிப்புகள்

நம்பிக்கையான தகவல்களின் படி, தடுப்புக் காவலில் உள்ளவர்கள் பலர் கற்பழிப்புகளுக்கு உள்ளாகியுள்ளது தெரியவருகிறது. இது தொடர்பான பல புலனாய்வுகள் நடைபெற்றுள்ளன. ஆயினும் ஒரு வழக்கில் மட்டுமே ஒரு பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டார்.

### சட்டவிலக்கு

1979 இல் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டமும், மாதாந்தம் நீடிக்கப்படும் அவசரகாலச் சட்டமும் வழமையான தடுப்புக்காவல் சட்டங்களில் இருந்து விதிவிலக்கு அளிக்கிறது. இவை இரண்டும் தடுக்க முடியாத தனிமையில், தடுத்து வைத்திருப்பதற்கான அதிகாரத்தைக் கொடுத்துள்ளன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான ஒருவர் 18 மாதங்கள் வரை தடுத்து வைக்கப்படலாம். ஆனால் பல வழக்குகளில் இதற்கும் மேற்பட்ட கால அளவுக்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தமை வெளியாகியுள்ளது. பெரும்பாலான கைதிகள் இப்போது அவசர காலச்சட்டத்தின் கீழேயே அதிகளவில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். அவசரகாலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புச் செயலாளர் ஒப்பம் இடும்பட்சத்தில் ஒருவர் காலவரையின்றி தடுத்து வைக்கப்படலாம்.

### ஈ. பி. டி. பி. யின் 'வதைக்கூடம்'

அரசாங்கத்தால் ஆயுதபாணிகளாக்கப்பட்ட சட்டவிரோத தமிழ் அமைப்புக்கள் தமக்கென சொந்தமான தடுப்புக்காவல் வசதிகளை வைத்துள்ளனர். இவ்வாறான ஒரு அமைப்பான ஈ. பி.-டி. பி. யின் தலைவருக்கு எதிராக, சட்டவிரோதமாக கடத்திச் சென்றமை மற்றும் சித்திரவதை செய்தமை சம்பந்தமாக அடிப்படை மனித உரிமைமீறல் மனு ஒன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### கூட்டுமுறை

1993 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அரசாங்கப் பாதுகாப்புப் படைகளும் தமிழ்தீவிரவாத அமைப்புக்களும் கொழும்பில் சமாந்தரமான ரகசிய தடுப்புக் காவல் முறை ஒன்றை நடைமுறைப்படுத்தியதாக பலமனித உரிமை கண்காணிப்பாளர்களும் குற்றம் சாட்டினர். ஆகஸ்ட் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் ஆனுதாபிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட பலர், இலக்கத் தகடு இல்லாத வாகனங்களில் இனம்தெரியாத இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு பல மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டனர். பலர் உத்தியோகபூர்வமான தடுப்பு முகாம்களுக்கு மாற்றப்படுமுன் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர்.

### தனிப்பட்டோர் உரிமை பறிப்பு

இன்னும் தனிப்பட்டவர்களின் ரகசியத்தைப் பாதுகாப்பதையும் குடும்பம் மற்றும் வீட்டின் புனிதத் தன்மையை பேணுவதையும் அரசாங்கம் பொதுவாக மதிக்க வேண்டும். அவசரகாலச் சட்டம் அளிக்கும் விசேட உரிமையால் நீதிமன்ற உத்தரவு இன்றி எந்த இடமும் எந்த வாகனமும் சோதனைக்குள்ளாக்கப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் தொலைபேசி உரையாடல்களும் ஏனைய தொடர்புகளும் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களுக்கு அனுப்பப்படும் சாதாரண கடிதங்கள் கூட உடைக்கப்படுகின்றன. நாணய நோட்டுக்கள் அபகரிக்கப்படுகின்றன. இத்தகைய செயற்பாடுகள் தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கையில் நியாயமற்ற தலையீடுகளாக உள்ளன". ■

# வல்லை வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் முக்கிய மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் அவ் வைத்திசாலைக்கு வரும் நோயாளிகள் பெரிதும் கஸ்ட நிலையை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலையையடுத்து இப்பகுதிகளில் நெருப்புக்காய்ச்சல், மலேரியா போன்ற ஆபத்தான நோய்கள் பரவிவருகின்றன. இந்நோய்க்கு இலக்காகிய பலர் இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
இந்நோயாளிகளின் நோயைக் குணப்படுத்தக்கூடிய வகையில் மருந்து வகைகள் இல்லாததினால் வைத்திய அதிகாரிகளும், நோயாளிகளும் பெரும் கஸ்ட நிலையை எதிர்நோக்கி வருகின்றனர்.
வைத்தியசாலையில் பல நோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதோடு வெளிநோயாளர் நாளொன்றுக்கு நூறு பேருக்கு மேல் சிகிச்சை பெற வருகின்றனர். கடந்த வருடத்திற்கான நாலாம் கந்தாயத்துக்குரிய மருந்துகள் கூட இன்னமும் வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. ■

# டாக்டர்கள் ஓய்வு வயது 62 ஆக உயர்த்த முயற்சி

நிபுணத்துவம் பெற்ற டாக்டர்களின் இளைப்பாறும் வயதெல்லையை 60 இல் இருந்து 62 ஆக உயர்த்த சிறீலங்கா சுகாதார அமைச்சு, அரசின் அங்கீகாரத்தைக் கோரியுள்ளது. "விரைவில் நிபுணத்துவ டாக்டர்கள் பலர் 60 வயதாவதையடுத்து ஓய்வு பெற இருக்கின்றனர். இவ்விதம் அவர்கள் ஓய்வுபெற்றால் நாம் பலரின் சேவையை இழக்க நேரிடும். தற்போது 60 வயதினை அடையும் டாக்டர்கள், அவர்கள் விரும்பின் 65 வயது வரை ஒப்பந்த அடிப்படையிலும் கடமை புரியலாம்" என சுகாதார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ■

# இலங்கை வங்கி தீவுக்கிளை மீனவர்களுக்குக் கடன் ?

தீவுப்பகுதியில் தற்போது இயங்கும் இலங்கை வங்கிக்கிளை மீனவர்களுக்கான கடன் திட்டத்தின்படி, இருப்பத்தைந்து மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.
மீனவர் கடன்திட்டத்திற்கு அமைவாக உலக வங்கியினால் வழங்கப்பட்ட நிதி இவ்வாறு பகிரப்பட்டுள்ளது. எனினும் இக் கடன்களைப் பெற்றவர்களில் அநேகமானோர் மீனவர்கள் அல்ல என்றும், பாதுகாப்புப் படையைச் சேர்ந்தோரும், அரசுக்கு சார்பான ஆயுதக்குழுக்களைச் சேர்ந்தோரும் மேற்படி கடன்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளனர் எனவும் தெரியவருகிறது. மேலும் மீனவர்களுக்காக வழங்கப்பட்ட சில படகுகளும் பாதுகாப்பு படையினரின் போக்குவரத்திற்கே பயன்படுவதாகவும் கூறப்படுகின்றது.
எனினும் கணக்காளர் அறிக்கையில், யாழ்ப்பாண மீனவர்களுக்கான மீன்பிடி கடன்திட்டத்தின் கீழேயே இக்கடன் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ■

# தென்றலாக வீசிய..

மக்களின் வாழ்வுக்கு வாழ்வளித்த புலோப்பளைச் சமரில், வன்னி நிலத்தின் அந்தப் போர்த்தளபதி, எங்கள் நரேஸ், வீழ்ந்து போனான்!

எதிரி ஏவிவிட்ட பீரங்கிக் குண்டொன்று எங்களிடமிருந்து அவனைப் பிரித்துக் கொள்ளும் அந்தக் கணப்பொழுதை 'ஒளிவீச்சு' எங்களுக்குக் காட்டியது.

நெஞ்சு தவிக்க நாங்கள் பார்த்தோம். தென்றலாக வீசிய அந்தப் புயல் ஓய்ந்து போனது! ■

# தமிழருக்கு வழங்கப்பட்ட உணவு தென்பகுதிக்கு

உலக உணவுத் திட்டப் பிரிவால் வடக்கு -கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ் அகதிகளுக்கென வழங்கப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை, சிறீலங்கா அரசு தென்பகுதி அகதிகளுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி பிரிவால் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள தமிழ் மக்களுக்கு வழங்கவென அனுப்பி வைக்கப்பட்ட 19 கோடியே 20 இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களும் கொழும்பு, குருநாகல், அநுராதபுரம், மாத்தளை, பொலநறுவை, புத்தளம் ஆகிய இடங்களின் முகாம்களிலுள்ள 54 ஆயிரம் சிங்கள மக்களுக்கே வழங்க சிறீலங்கா அரசு திட்டமிட்டுள்ளது. ■

